பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, ஆவணி; 22—8—52. தளிர்—47

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## புறநெறி

உலகில் பிறந்தோர் அனைவரும் முடிவில் பெற விரும்புவது இன்பமேயாகும். வாழ்க்கைப் பாதையில் இடர்ப்பாடுகள் பலவற்றிற்கும் அஞ்சாது செலலும் ஒவ்வொருவரும் முடிவில் 'இன்பம்' என்ற ஒரு பெரும் குறிக்கோளுடன்தான் செல்கின்றனர். வீடு பேற்றுக்கு முயல்வோரும் அந்தமில் இன்பமாகிய ஒரு பெருநிலையைத்தானே விழைகின்றனர்!

இன்பம், ஒரு சிலர்க்கு எளிதாகப் பெற முடிகிறது. ஒரு சிலர் இன்பம் பெறுதற்காகப் படும் தொல்லைகள் சொல்லத் தரமன்று. இல்வாழ்க்கையில் அன்பினை அடிப்படையாகக் கொண்டு நிகழும் அறநிகழ்ச்சிகளால் ஒருவன், தான் கருதிய இன்பத்தை எளிதில் அடைய முடியும். 'ஊருணி நீரை'ப் போன்ற தன் செல்வத்தைக் கொண்டு, நல்லோர் பலரும், சுற்றமும் மகிழ்ச்சியுடன் வாழும் அளவுக்குப் பகுத்துண்டு தன்னைச் சுற்றிலும் அமைதியும் இன்பமும் நிலவ வாழும் வாழ்வினை விட ஒருவற்கு இன்பம் வேறில்லை.

குடும்ப வாழ்வில், பண்பும் பயனும் பகுத்தோர்ந்து செல்லும் ஒருவனுக்கு எளிதாக இன்பம் பெற இருக்க, அதனை விட்டு மக்களை மனைவியை ஒக்கலை யெல்லாம் துறந்து காட்டிற் புகுந்து கடுந்தவம் இயற்றுவதால் பெறக்கூடிய தென்னை?

அமைதியான, அறநெறி பிறழாத வாழ்வில் 'அருட்பண்பு' ஆட்சி புரிகின்றது; தமக்கு நேரும் குறைகளைக் பொறுத்துக் கோடலும் பிறவுயிர்கட்குத் துன்பம் புரியாமல் காத்தளித்தலும் சான்றோர்களால் சிறந்த தவமென்று கருதப் படுகிறது. இல்வாழ்வில் இத் தவமும் ஒருங்கு பெற இயலும்போது இல்வாழ்வினை நீத்துப் புறநெறிகளில் செல்வார் செயல் வீணானது என்பது பெறப்படுமன்றோ!

ஆகவே புறநெறிகளை யெல்லாம் விடுத்து, நல்லறக் கடப்பாட்டில் இல்வாழ்க்கையைச் செலுத்துதலே சாலச் சிறந்ததாகும் என்று பெரியோர் கருதுகின்றனர்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை
ஆற்றின் புறத்(து) ஆற்றில்
போஒய்ப் பெறுவ (து) எவன்.

இலவாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின்—ஒருவன் இல் வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனாயின்; புறத்தாற்றில் போஒய்ப் பெறுவது எவன்—அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன்யாது?

அறத்தாறென்பது, பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையும் என மேற்குறித்த ஆறு. புறத்தாறு இல்லைவிட்டு வனத்துச் செல்லும் நிலை. அந்நிலையின் இது பயனுடைத் தென்பார் 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

மற்றும், 'போஒய்' என்ற அளபெடையின் ஒலிக்குறிப்பு எளிதாக இல் வாழ்வில் இன்பம் அடைவதை விட்டுத் துறந்து கானஞ் சென்று இடர்தரும் கடுநெறிகளில் உழலும் அறியாமையை உணர்த்துகின்றது.

இல் வாழ்க்கை, எஞ்ஞான்றும் அன்பினையும் அறத்தினையும் தன் முழு நோக்கமாகவும் எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாகவும் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறின்றேல் அவ் வாழ்வும் பயனுடைத்தாகாது என்பது கருத்து.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | நந்தன, ஆவணி, | தளிர் |
|---|---|---|
| 4 | 22-8-52 வெள்ளி | 47 |

# யாம் கண்ட - - - - - நல்லோர்

(முன் தொடர்ச்சி)

**திருக்கச்சூரில்: (7. 6. 52)**

இங்குள்ள திருக்கோயில்கள் இரண்டு. மலைப்பக்கத்தில் இப்போது ஊருக்கு மேற்கே உள்ள மருந்தீசர் கோயிலே பாடல் பெற்றது. கச்சூர் வடபால் ஆலக் கோயில் என்று ஆளுடைய நம்பிகள் குறிப்பிடுவது இதையே. இரயில் வண்டியில் போகிறபோதே காட்டுப் பாக்கத்துக்கும் சிங்கப்பெருமாள் கோயிலுக்கும் இடையில் தெரியும் மற்றொரு கோயில் தியாகர் கோயில். சொத்தும் பெருமையும் இப்போது இதற்கே மிகுதியாக இருக்கிறது.

16 ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை அடியேன் பாடல்பெற்ற இப் பதிக்குச் சென்றபோது இது மிகவும் பாழடைந்து கிடந்தது. எனவே இப்போது அது பார்க்கக் கூடிய நிலையில் இராது என்று எண்ணி வருந்திக் கொண்டே சென்ற எனக்கு, ஊருக்கிடையே உள்ள தியாகர் கோயிலைவிட மிகவும் திருப்பணி செய்யப் பட்டுப் புதிதாகவும் இருந்த அக் கோயிலைக் கண்டதும் பெருவியப்பும் விம்மிதமும் ஏற்பட்டன.

சுற்றி வீடுகள் முதலியன எதுவும் இன்றி, மலைப்புறத்தில் நல்ல வழிகூட இல்லாமல் தனியே உள்ள அக் கோயிலைப் பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் புதுக்கி விளக்கமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பவர் குழந்தைவேலு சாமி என்னும் ஒரு பேரன்பராவர். இப்போதும் பிச்சை எடுத்தே உணவைக் கொள்ளும் அவர் துறவு நிலையில் இரவும் பகலும் அக் கோயிலிலேயே இருந்து அதன் வளர்ச்சியிலேயே கருத்து வைத்து ஏதேதோ செய்து வருகின்றார். அவர் கல்வி நலமோ உலகியல் நலங்களோ வேறு ஆடம்பர நிலைகளோ சிறிதும் இல்லாத மிகஎளிய நிலையில் இருக்கின்றார் என்றாலும் ஒரு தூய ஆன்மா என்று நன்கு தெரிகிறது. இல்லையேல் இவ்வளவு அரிய பெரிய பணியை அவ்விடத்தில் அவரால் செய்திருக்க முடியுமா?

"கல்லாத பேர்களே நல்லவர்கள்! நல்லவர்கள்!!" என்னும் சொல்லுக்கு இலக்கியம் அவரே எனலாம். செல்வர்கள் தாம் தம் கடமைகளை அறிந்து சரிவர முன்வருவதில்லை என்றாலும் அங்கங்கே உள்ள கற்றவர்களும் தம் கடமைகளை உணர்ந்து இத்தகைய திருக் கோயில்களைச் செப்பனிட முன்னின்று முயலாத நிலையில் இவ் வெளிய "மனிதர்" இத் திருக்கோயிலை அழிந்துவிடாதபடி பாதுகாத்துப் புதுக்கிய செயலை எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாமன்றோ! இறைவன் இத் தக்கவர்க்கு ஏற்ற நலங்களைக் கொடுத்தருள்வான் என்பதில் ஐயமில்லை.

உறுதியான உள்ளமும் உண்மையன்பும் ஒழுக்கமும் இருந்தால் யாரும் எத்தகைய அருஞ் செயலையும் எங்கும் சாதிக்கலாம் என்பதை இந்த அன்பர் மெய்ப்பித்திருக்கின்றார். பல நல்ல நூல்களைப் பெற்றிருந்தும், செய்யவேண்டிய பல அரும் பெரும் பணிகள் எதிரில் இருக்க, அவற்றை மேலும் மேலும் முனைந்து செய்யாமல், எப்படியோ செய்ய நேர்ந்து விட்ட சிற்சில பணிகளையே வாழ்நாள் முழுதும் தற்பெருமையாகப் பீற்றிக் கொண்டு நலம் தேடுபவர்களின் அறியாமையை என்னென்பது!

**திருஇடைச் சுரத்தில்: (8. 6. 52)**

பாடல் பெற்ற திருப்பதிகள் பலவற்றில் காண முடியாத அரிய நிகழ்ச்சி ஒன்றை இவ்வூரில் கண்டோம். அதாவது இங்குள்ள திருக்கோயில் குருக்கள் இவ்வூர்ப் பதிகத்தை மனமுருகி ஓதி அதன் வரலாற்றையும் தம்மை மறந்த இன்ப நிலை

யில் பெரிய புராணப் பாடல்களையும் சொல்லி விளக்கினார். வருவார்பால் அருச்சனை முதலியவற்றிற்குக் காசு அதிகம் பெறும் நோக்கத்தோடு இத்தலம் இன்னார் பாடல் பெற்றது அவரால் இங்கே இன்ன 'அற்புதம்' நிகழ்த்தப்பட்டது என்பன போன்ற வரலாறுகளை நூல்களோடு, ஒட்டாதபடி கூட்டியும் குறைத்தும் கண்டபடி திரித்தும் கூறுவதோடு நிற்கும் பலவூர்க் குருக்கள்மாரை போலாது தமது பதிக்குச் சிறப்பு எந்தப் பதிகத்தால் வந்ததோ அந்தப் பதிகத்தை உண்மையான அன்புடன் ஓதி ஆண்டவன் அருளிருந்தபடி அன்பர்கள் கொடுத்தது கொடுக்கட்டும் என்னும் போக்கில் இருக்க யான்கண்ட ஒரேஒரு ஆதிசைவ அந்தணர் இவரே யாவர்.

பாடல் பெற்ற திருக்கோயில் குருக்கள்மாரெல்லாம் ஏன் மற்ற திருக்கோயில் குருக்கள்மாரும் செந்தமிழ்த் திருமுறைப் பாடல்களின் சிறப்பையும். அடியார்களின் பெருமையையும் நன்குணர்ந்து இதபோற் போற்றுவாராயின் நமது நாட்டில் திருவருள் நெறி நன்கு தழைக்கும் என்றும் அதற்கு நேரிட்டுள்ள தடைகள் விரைவில் ஒழியும் என்றும் சொல்லவும் வேண்டுமோ?

### திருக்கள்ளிலில்: (9-6-52)

9-6-52 காலையில் எங்கள் திருமயிலை வழிபாட்டிலும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பான "வழிபாட்டுக் கூட்டவை" என்னும் சைவ சபைகளின் பொதுப் பேரவை அமைப்பிலும் கலந்து கொண்ட பெரம்பூர் அன்பர் திரு. தி. க. சுந்தரம் பிள்ளை அவர்கள் பொன்னேரிப் பக்கத்தில் 'திருக்களம்' என வழங்கும் இத் திருப்பதிக்கு வந்தார்கள். அவர்களால் நாங்கள் பல நன்மைகளைப் பெற்றோம். ஒரு விவரமும் தெரிவிக்காது அன்பர்களோடு போந்த அவர்கள் எல்லோரையும் இங்குள்ள மிகவும் அருமையான நந்தி தீர்த்தக் கரையில் இருத்திவிட்டு, மாலை 7 மணிக்கு மேல் இருட்டில் இரண்டு கல் தொலைவு நடந்து சென்று மடவிளாகம் என்னும் இடத்தில் உள்ள சைவப் பெரியார் திரு. வே. மாணிக்க முதலியார் அவர்களை அழைத்து வந்தார்கள். முதிர்ந்த ஆண்டினராயும், சிறிது ஊனமுற்ற காலுடையவராயும் இருந்த அப் பெரியார் ஆசிரியர் அவர்களின் வரவை அறிந்ததும், முன்னரே அவர்களின் அரிய விரிவுரைகள் பலவற்றைச் சென்னையில் கேட்டு மகிழ்ந்தவர்களாதலின், மிகவும் மகிழ்ந்து பேராவலுடன் இளைஞரெனக் கடுகி வந்து எங்களைக் கண்டு இன்னுரை கூறி மகிழ்வித்தார்கள். (வரும்)

—ஆடலரசு.

---

8-ம் பக்கம் தொடர்ச்சி

பெறக் குருகுல எண்ணத்தைப் பரவவைக்க வேண்டும். அதனால் நாடு முன்னேறும். அமெரிக்கர் தம் ஊதியத்தில் நூற்றுக்கு இரண்டு (2%) விழுக்காடு நற்செயல்களுக்காக ஒதுக்கிவைக்கின்றனர். அவ்வாறு அவர்கள் சேர்க்கும் தொகை உலகெங்கும் உதவுகின்றது. அதைப்போல நாமும் நற்செயல்களைச் செய்ய வேண்டும். குருகுலப் பணித்திட்டங்களை மனத்திட் கொண்டு முயல்வீராக எனத் தெரிவித்துக் கொண்டு, இப் பணித்திட்ட வெளியீட்டை வெளியிடுவிக்கின்றேன்.


## குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு — விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள் — விலை அணா 4.
3. தணிகைமலை அல்லது அமைதி — விலை அணா 6.
4. திருக்கழுக்குன்றப் பதிகம் — விலை அணா 2.
5. கருக் கலை — விலை அணா 4.
6. மூன்று உண்மைகள் — விலை அணா 3.
7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும் — விலை அணா 9.
8. முல்லைப்பாட்டு அகராதி — விலை அணா 8.
9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம் — விலை ரூ. 1.
10. ஆத்திசூடி - கருத்துரை — விலை 0-0-3.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P. O., (S.I.R.

# திருக்கழுக்குன்றச் சொற்பொழிவுகள்

(முன் தொடர்ச்சி)

இரண்டாம் நாள் (28-6.52) திருமுறைப் பேரவைத் தலைவர், சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேலு முதலியார் **B. A., L. T.,** அவர்களின் முன்னுரை:

"முறை என்பது நூல் என்று பொருள்படும்; நூல் கோணலை நீக்கிச் செம்மைப் படுத்துவது. அநுபவப் பயனாக உள்ள திருமுறை நூல்களைப் பன்னிரண்டாக வைத்துள்ளனர் பெரியோர்.

தமிழ்நாடு இன்றுள்ள குழப்பத்திலிருந்து மீண்டும் நன்னெறிப்படவேண்டுமானால் திருமுறையை ஓதுவதே சிறந்த முறை. இறைவன் உண்டு என்பதை அநுபவமாகத் தெரிவிப்பது திருமுறை. எவ்வளவு சோதித்து ஆராய்ந்தாலும் இது நிற்கக்கூடியது. சொல்லும் பொருளும் குற்றமின்றி இருப்பது உண்மையானது என்று வட நூலார் கொள்வர். இம்முறைப்படி ஆராய்ந்தும், அகச்சான்றுகளைக் கொண்டும் திருமுறை உண்மை உடையது என்பதைக் காணலாம்.

இளைஞர் இனித் திருமுறையை நன்கு போற்றிக் கொள்வார்களா என்று ஐயம் தோன்றுகிறது. சமய வளர்ச்சிக்காக இறைவன் ஞான சம்பந்தரை அனுப்பியதாகச் சேக்கிழார் கூறுகின்றார். இதற்கு அகச்சான்று உண்டு. இறைவனை அடைந்தவர் மீண்டும் பிரிந்து வருவதில்லை எனினும் அருள் வாழ்க்கையை வாழவைக்கும் பொருட்டு வருதலுண்டு. இதனை மாணிக்க வாசகரும் 'நீக்கி முன் எனை, என்னும் பாடலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

நம் நாட்டுச் சமயம், பெரியோர் பெற்ற அநுபவத்தைக் கொண்டது. மேல்நாட்டினர் சமயம், மக்கள் மன ஊகத்தால் **(Speculation)** அமைந்துள்ளது.

திருமுறை நம்மை உண்மையில் ஈடுபடுத்துவதால் அதனை நாளும் ஓதவேண்டும். திருவாசகம் தாழ்ந்த நிலையில் இருப்பவருக்கும் உயர்ந்த நிலையைக் காட்டி அவர்களை மேலே அழைத்துச் செல்லும். மற்றவை பெரும்பாலும் அவை உள்ள பெருநிலைக்குச் சென்றால் தான் அவற்றின் உயர்வு தெரியும்படி இருக்கும்.

மக்கள் நல்லொழுக்கத்தைப் பெறவேண்டுமென்பதற்காகக் கடவுள் என்பது கற்பிக்கப்பட்டது என்று எண்ணினால் அன்பு உண்டாகாது. இறைவன் ஒருவன் உண்டு என்பதை ஐயந்திரிபின்றி அறிந்தால் மட்டுமே அன்புதோன்றும். அன்பென்னும் வித்தை வளர்க்கத் திருவாசகமென்னும் நீரைப்பாய்ச்ச வேண்டும். பாய்ச்சினால் சிவாநுபவம் என்னும் பயன் கிடைக்கும். திருவாசகம் என்னும் நீரைத்தர இறைவன் மேகமாக வந்து பொழிந்தார் என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் மாணிக்கவாசகர் வாயிலாக இதனை அளித்தார்.

வாழ்க்கையில் வழிபாடு அவசியம். அதற்குப் பயன் உண்டு. நாள்தோறும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்குச் சமய அறிவைப் புகட்ட வேண்டும். "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை...." என்னும் திருமந்திரத்தின்படி வழிபாடு செய்தும், நம்முடன் வாழும் விலங்குகளுக்கு உதவியும், பசித்தோர்க்கு உணவிட்டும் அனைவரிடமும் இன்னுரை பேசியும் வாழ வேண்டும். அரிய கருத்துக்களை எளிய முறையில் கூறும் பாடங்களை உடையது திருமுறை. இதனை நாம் பாராயணம் செய்யவேண்டும்.

எனக்கு நாளுக்கு நாள் சமயத்தில் பற்று மிகுகின்றது. சிலருக்குப் பற்றுக் குறைவதற்குக் காரணம் திருமுறையை ஓதாமையேயாகும். மிகச் சிறிய பருவத்திலேயே சிறுவர்க்குச் சமய உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். வேறு எந்த முறையில் சென்றாலும் நாட்டுக்கு நல்ல பயன் கிடைக்காது. திருமுறையைப் படிப்பதனால் உள்ளம் பண்படும். திருமுறை சாத்திரமாகவும் தோத்திரமாகவும் உள்ளது."

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

## குருகுலப் பணித்திட்ட வெளியீடு

ஆசிரியர் அவர்களின் உரை:

"இவ்விழாவில் அரிய பெரிய கருத்துக்கள் சிந்துகின்றன. இது ஒரு பெரிய சிறப்பு. அக் கருத்துக்கள் படித்துப் பெற முடியாதவை. இறைவன் முன்னிலையில் இருப்பதால் இது நிகழ்கின்றது. அதோடு எதிர்பாராத பல பெரியோர் வந்து கொண்டிருக்கின்றனர். இதுஒரு சிறப்பு. இளமையிலிருந்தே நல் லுளம் பெற்றுள்ள அரிய பெரியார் திருமிகு O. P. இராமசாமி ரெட்டியார் அவர்கள் இங்கே வந்திருக்கிருர்கள். குருகுலப் பணித்திட்டத்தை இவ்வாண்டு இங்கு வெளியிட வேண்டுமென்று எண்ணினேம். அவர்கள் வந்திருப்பதால் இதனை வெளியிடும்படி கேட்டுக்கொண்டோம். கருணையால் வெளியிட இசைந்தார்கள்.

குருகுலம், திருக்குறளை அடிப் படையாகக் கொண்டது. உலகுக்குப் பொது நூல் என்று ஒன்ருக இருப்பது திருக்குறள். இதற்குரிய பணி, பல ஆண்டுகளாக எண்ணப்பட்டு வந்தது. எண்ணத்தைத் தவிர வேறு நிலைகள் எனக்கு இல்லை. உண்மை நாட்டத்தைக் கொண்டே திருவருள் இயக்குகின்றது. எண்ணம் பெரிதாக உண்டு. ஆனால் நிலை சிறிதாக உள்ளது. எனினும் எப்படியோ எண்ணம் உருவாகிக் குருகுலம் உண்டானது. சென்னையில் விரிவுரை நிகழ்த்திய காலத்தில் குருகுலத்தை உருவாக்கும் வாய்ப்புகள் அமைந்தன. என் பெற்ருேரின், கருத்துப்படி சிறப்பாகத் தாயாரின் விருப்பப்படி, என் பிறப்பிடமாகிய மாம்பாக்கத்திலேயே அது உருவானது.

திருக்குறள் அறநூலானதால் அது செயற்படுத்தப் பட வேண்டும். செயலுக்கு வாராதது அறமாகாது. அறிந்தவை செயல் நடந்தால் மேன்மேல் அறிவு விளக்கம் வரும். அன்பு செயற்படுமானல் அது மேலுமேலும் வளரும். அது போலவே அருளும் தவமும். திருக்குறளைப் படிக்கும் முறை இது.

திருக்குறளைச் செயற்படுத்த ஏறக்குறைய 150 ஏக்கர் நிலப் பரப்பு வேண்டும் என்று கருதப் பட்டது. இப்பொழுது அதில் ஏறக்குறையப் பாதி அளவு, விலைக்குக் கிடைத்துள்ளது.

முதலில் நாம் திருக்குறளின்படி நடந்தால்தான் பிறரிடமும் அதைச் செயற்படுத்த முடியும். திருக்குறளில் பசுவுக்கு நீர் வேண்டுமென்று கூட ஒருவரிடம் கேட்கக் கூடாதென்று குறிக்கப்பட்டுள்ளது.

திருவருட்குச் சம்மதமானல் குருகுலம் இனிது நடக்கும் என்னும் துணிவோடும் ஆறுதலோடும், ஆனல், இடையரு ஊக்கத்துடன் உரிய உழைப்புகளின் வழி முயன்று வருகின்றேன். தமிழில் நூல்கள் எழுதுவதால், பாடல்கள் பயில்விப்பதால் மட்டும் பெரும் பொருள் திரளுவதில்லை. பெறுகின்ற சிறு பொருளை வீண் செலவுகளில் செல்ல விடாமலும் சிதற விடாமலும் உருவாய்க் குருகுல வழியிற் செலவிட்டு வருகிறேன்.

நிலங்கள் வாங்கவேண்டியிருக்கிறது. இரண்டோராண்டில் வாங்கி விடலாம் என்று நம்புகிறேன். இதற்கு இறைவன் பெருந்துணை வேண்டும். தேவையான நிலங்கள் கிடைத்த பின்பே, மேல் வேலை தொடங்கும். இப்போது அங்கே ஒரு தொடக்கப் பள்ளியும் அச்சகமும் இருக்கின்றன; 'முல்லைக் கொடி' என்னும் வாரத்தாள்' ஒன்று நடை பெறுகிறது.

குருகுலத் திறப்பு விழா 1949ல் நடந்தது. திரு. O. P. R. அவர்களே திறந்து வைத்தார்கள். விழா நன்முறையில் பெரும்பொருட் செலவில் சிறப்பாக நிகழ்ந்தது. இனி, 1955ல் ஒரு விழா நடக்கவேண்டும்; விழா இந்திய விழாவாக நடக்க

நஞ்சன் கூடுபல்பொடி

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர் தெரு, :: சென்னை-1

வேண்டும் என்பது என் எண்ணம். திருவருட் டுணையால் அப்படியே நடக்கும்.

நிலங்கள் ஒழுங்குபட்ட பின் இன்னின்ன அதிகாரம் இன்னின்ன இடத்தில் செயலாக்க வேண்டும் என்பது பிரிக்கப்படும். அதிகார எண்ணிக்கைப்படி 133 விளம்பரப் பலகைகள் தரப்படும்.

திரு. R. K. சண்முகம் செட்டியார் அவர்களுடன் அண்மையிற் பேச நேர்ந்த போது, உலக முழுவதும், தாம் கண்டவரை ஒரு நூலுக்குச் செயலகம் என்பது அமைந்ததில்லை; தமிழகம் அவ்வெற்றியைப் பெறுவது நன்று என்று தெரிவித்தார்கள். இதுவரை அமையாத ஒன்று அப்படி அமைவதில் அனைவர்க்கும் உணர்ச்சி மிகுவது இயல்பே; உணர்ச்சி மிகவும் வேண்டும்.

ஓர் அதிகாரத்தைச் செயலுக்குக் கொண்டுவர ஆயிரக் கணக்கிலேனும் செலவாக வேண்டியிருக்கும். மருந்து என்னும் அதிகாரத்திற்குரிய இடத்தில் மூலிகைகளை வளர்த்தல், இயற்கை மருத்துவம் செய்தல் முதலியன கவனிக்க வேண்டும்; விருந்து என்னும் அதிகாரத்திற்குரிய இடத்தில் உறைவு விடுதி அமைத்தல் முதலியன நடைபெற வேண்டும். 'தவம்' என்ற பகுதியில் தக்கவர், தவமுறைகளிற் பழகிவர வேண்டும். இவ்வாறு ஒவ்வோர் அதிகாரத்திற்கும் எவ்வளவோ செயல் செய்யலாம்.

இனி, குறிப்பறிதல் என்பதைப் போன்ற பண்பதிகாரங்களை எவ்வாறு செயற்படுத்துவது என்று ஐயம் வரும். அதற்குக் குறிப்பறிந்து செயல் செய்தவர் வரலாறுகளைத் தொகுத்தல்; அத்திறமைகளைத் தெரிவித்தல், அந்நிகழ்ச்சிகளையும் பயன்களையும் விளக்கல்; கருத்தாலும் காட்சிகளாலும் பரவச் செய்தல் முதலிய பல்வகைச் செயல்களைச் செய்யலாம். புலான் மறுத்தல் என்னும் அதிகாரத்திற்கு லண்டன் மரக்கறியாளர் கழகம் (**London Vegetarian Society**) செய்வதைப் போலப் பலப்பல, பணிகளைச் செய்யலாம். செயலிற் பெருகக் காட்ட முடியாத அதிகாரக் கருத்துக்களை விளக்கிப் பிரசாரம் செய்யலாம். திருக்குறளின் கருத்துரைகளை அவ்விடத்தே எழுதி வைக்கலாம். உலகிலுள்ள அரசுகளுக்குத் திருக்குறளில் பணிகள் நிரம்ப உள்ளன.

அவ்வளவு செயல்கள் செய்யலாம். திருக்குறளுக்கு, இவையெல்லாம் 'இருந்து செய்யும்' பணிகள். இனிச் 'சென்று செய்தல்' என்னும் குருகுலப் பணிகளும் உண்டு. அது காந்தி அடிகள் வகுத்த பணித்திட்டங்களைப் போல, சங்ககாலத் தலைவர் முதல் இராமலிங்கர், காந்தியடிகள் வரை உள்ள பெரியோர்கள் கருதிய சீர்திருத்தக் கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வரத்திட்டம் வகுத்துச் செய்தலாகும். இது மன்பதை உயர்வுப் பணி.

சமயம் வேறு, உலகியல் வேறல்ல. இறைபணி, உலகப் பணி என்பவை எல்லாம் பொது நோக்கில் ஒன்றே. உலகப் பணியால்தான் இறைவனை எளிதாகவும் விரைவாகவும் அணுகும் தகுதிவரும். இறைவனை உண்மையாகப் பணிபவர்கள் உலகப் பணிகளைச் செய்தே தீர வேண்டும். பணி செய்துதான் ஆண்டவனைத் தொழ வேண்டும். தம்மை உயர்த்திக் கொள்வதே நோக்கமென்றாலும் அதுவும் பணி செய்வதனாலேயே நிறைவேற வேண்டும்.

தொண்டை நாட்டில் உள்ள முப்பத்திரண்டு பாடல் பெற்ற இடங்களில் முப்பத்திரண்டு அறங்கள் செய்யலாம். அந்நிலையில் தொண்டுகள் நான்கு ஜில்லாக்களில் பரவுதல் கொள்ளும். பாடல் பெற்ற தலங்கள் அதற்குப் பேராற்றல் தரும்.

குருகுலப் பணித் திட்டங்கள் :

(1) நாட்டுப்புறச் சேவை, (2) ஒன்றே குலம், (3) ஆட்சியுணர்வு, (4) கல்வியறிவு (5) பொருள் செயல் வகை, (6) நல்லுணவுப் பெருக்கம் (7) குடிசைத் தொழில்

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

(8) இயற்கை மருத்துவம் (9) மன்பதைப் பணி (10) சிற்றுயிர்ப்பணி, (11) சான்றாண்மை இயக்கம், (12) பிறவிநலம் முதலியன.

மக்கள் குணசாலிகளானால் ஞானிகளாவர். எல்லாவற்றையும் அரசாங்கத்திலிருந்தே எதிர்பாராமல் நம்மால் இயன்றவற்றை நாமே சேர்ந்து செய்து கொள்ள முயல வேண்டும். தாய்மாரும் தாம செய்யக்கூடிய குடிசைத் தொழில்களைச் செய்ய வேண்டும். சிற்றுயிர்ப்பணி என்பது ஆனினம் போன்ற சிற்றுயிர்களைப் பாது காத்து வளர்த்தலாகும். அவற்றைத் தொகை தொகையாகக் கொல்லுவதாற்றான் சண்டைகள் நோய்கள் போன்றவற்றில் தொகை தொகையாக இறக்க நேர்கின்றது. பிறவிநலம் பெறுவதென்பது எதற்கு நாம் பிறந்தோமோ அதைப்பெற முயல்வது. இப் பன்னிரண்டு திட்டங்களில் அடங்காப் பணிகள் உண்டென்று காட்டினால் அவற்றையும் இவற்றுக்குள் அடக்கிக் காட்டலாம். இப்பணிகள் அருள் அடிப்படையில் நடக்க வேண்டும்.

நிலங்கள் முழுவதும் அமைந்த பின், குருகுலம் இன்னின்ன முறைகளில் நடைபெற வேண்டுமென்பதற்கு ஓர் விருப்ப ஆவணம் (Will) எழுதி, 1955ம் ஆண்டில் வெளியிட எண்ணியிருக்கிறேன்.

### திரு. O. P. இராமசாமி ரெட்டியார் அவர்கள் உரை:

சான்றோர்களைக் கண்டு ஏதாவது அடையலாம் என்று வந்தேன். எதிர்பாராமல் குருகுலப் பணித்திட்டத்தை வெளியிடும் பணி எனக்குக் கிடைத்துள்ளது. திருவருளின் எண்ணம் அதுவாக உள்ளது.

திருவருள் ஏற்றவர்களைக் கொண்டு செயல்களைச் செய்து வருகின்றது. அதன் விருப்பப் படியே எதுவும் நடைபெறும். திரு. இளவழகனார் தம் குருகுலம் எவ்வாறு நடைபெற வேண்டுமென்பதைத் தெரிவித்தார். அவருடைய நல்ல உள்ளத்தில் திண்ணிய எண்ணம் தோன்றி இருக்கிறது. அவ்வெண்ணம் பயனுறத் திருவருள் தகுந்த கருவியாக அவரையே பிடித்துள்ளது. அவர் நல்ல பண்புள்ளம் படைத்தவர். பணி செய்தலையே தம் தவமாகக் கொண்டுள்ளவர். எனவே அவர் எண்ணியன நன்கு நடைபெறும். அதைப்பயன் படுத்திக் கொள்வது நம் கடமை. அது செயற்பட நாமும் நம் பணியைச் செய்ய வேண்டும். அது செயற்படுவது நம் உள்ளத்தையும் முயற்சியையும் பொறுத்துள்ளது. இங்கு வந்துள்ளோர் அனைவரும் இதற்கு "நாம் எவ்வாறு உதவலாம்" என்று எண்ணி ஏதேனும் செய்ய வேண்டுவது கடமையாகும். அவரிடம் திண்ணிய உள்ளம் உண்டு. ஒரு செயல் நடப்பது எண்ணத்தின் திண்மையைப் பொறுத்துள்ளது. "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப்பெறின்" என்று திருவள்ளுவர் கூறி இருக்கின்றார். இக்காலத்தில் சமயப் பிரசாரம் குறைவாக உள்ளது. பெரியோர் அவ்வக் காலத்திற்கு ஏற்பப் பாக்களைப் பாடிக் கடவுள் தன்மையை அடைய வேண்டுமென்னும் எண்ணத்தை உண்டாக்குகின்றனர். இது நம் நாட்டுப் பழக்கம். அதன் படியே இப்படிப்பட்ட பெரியோர் பணிகளைத் தொடங்கும் போது நாம் எந்த வகையில் உதவி செய்யலாம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

சண்டைக்குப் பின் சிலரிடம் பணம் குவிந்து விட்டது. பலர் உணவின்றி வாடி வதங்குகின்றனர். ஒரு துறையில் ஆக்க வேலையும் மற்றொரு துறையில் அழிவு வேலையும் இன்று நடந்து வருகின்றன; அதாவது காந்தி அடிகள் முன்னோர் வழியில் செய்து காட்டிய தொண்டும், கடவுளை மறந்து செய்யும் அழிவுச் செயலும் நடக்கின்றன. நம்மில் பெரும்பாலோர் கடவுள் வேறு நம் வாழ்க்கை வேறு என்று எண்ணுகின்றோம். தவறான முறைகளில் பொருளைத் தேடுகிறோம். பெரும் பொருளைத் திரட்டுகிறோம். மற்றவரை அதாவது ஏழைகளை உறிஞ்சுகிறோம். அதனால் அவர்கள் உணவின்றித் தவிக்கின்றனர். அதன் பயனாகப் பொது உடைமை (Communism) என்னும் பெயரால் அழிவுச் சக்திகள் தோன்றுகின்றன. அவர்களுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லை. நாட்டிடம் அன்பில்லை. காந்தியம் மக்களைத் தீதிலிருந்து நன்மைக்குக் கொண்டு செல்லும். இவ்விரண்டு சக்திகளில் அழிவுச் சக்தியாகிய 'கம்யூனிசம்' வளருகின்றது, அது, நம்மிடம் சொல் செயல்களில் வேறுபாடு இருப்பதால் உண்டாகிறது. இவ் வேறுபாட்டை மாற்ற இதைப் போன்ற கூட்டங்கள் நடைபெற வேண்டும்.

நாம் சிற்றுயிர்கட்கும் உதவ வேண்டும். பெண்டிர் கோலம் இடுவது ஐம்பெரும் வேள்விகளில் ஒன்றாகும். எறும்பு போன்றவற்றிற்கு உணவு அதனால் கிடைக்கும். இன்று கோலமிடும் முறை மாறியுள்

ளது. அதன் தத்துவத்தைப் பெரியோர் சொல்ல வேண்டும்.

சமயத்தைப் பற்றிப் பேசுகிறபோது இறைவனுக்கும் மன்பதைக்கும் தொடர்புண்டு என்பதை எடுத்துக் காட்டிச் செயல் புரிய வேண்டும். இதனை அதிகமாகப் பெரியோர் சொல்லுவதில்லை. வெறும் தத்துவ விளக்கப் பேச்சுகள் பேசுவது இசைத்தட்டுப் பாடுவதைப் போன்றதாகும். பாமரர்க்கும் கடவுளுக்கும் நமக்குமுள்ள தொடர்பையும், நாம் வாழ வேண்டிய முறைகளையும் தெரிவிக்க வேண்டும்.

மனம் இளக வேண்டும். தனக்கென்றுள்ளது எல்லார்க்கும் பொதுவாக வேண்டும். இவ்வாறு மாறுவிட்டால் எவ்வளவு பேசினும் பயனில்லை. சமயத்துறையில் கற்றவர் மிகக் குறைவு. மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்பதனையும் மனத்தை ஒன்றுபடுத்த வேண்டுமென்பதனையும் முதன்மையாகக் கொள்ள வேண்டும். முதலில் ஒழுக்கம் வேண்டும். "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று திருவள்ளுவர் கூறினார். ஒழுக்கம் நாட்டில் வளரப் பண்பட்ட ஆசிரியர்களுடன் பழகியபின் இல்வாழ்க்கையை மேற்கொண்டால் நல்ல மக்களைப் பெறலாம்.

இன்று கல்வி கற்பவர் அதனால் எளிதாக வாழக்கூடிய அலுவல் ஏதேனும் கிடைக்குமா என்றே எதிர் பார்க்கின்றனர். கல்வித்திட்டத்தில் அவரவர்கள் தம்வாழ்க்கையைச் சுயபூர்த்தியாகச் செய்து கொள்ளக்கூடிய அமைப்பு வேண்டும். இதற்குக் குருகுலங்கள் பல்கவேண்டும்.

நாட்டில் அழிப்பு வேலை மிகுகின்றது. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பணமே கூற்றாக வரப்போகிறது. இது என் எச்சரிக்கை. செல்வர்கள் தமது பொருளுக்குப் பொருட்காப்பாளராக (**Trustees**) இருக்க வேண்டுமே ஒழிய உரிமையாளராக இருக்கக் கூடாது என்று காந்தியாரும் சொன்னார். மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று முப்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே மகாத்மா தெரிவித்தார். தீமைகளை, வருமுன்னர்க் காத்துக் கொள்வது நல்லது.

ஒரு கிராமத்திற்கு ஒரு பள்ளியும் அதற்குப் பத்து ஏக்கர் நிலமும் ஒதுக்கி அமைக்க வேண்டுமென்று நான் அரசிலிருந்தபோது எண்ணினேன். மூலாதாரக் கல்வியால்தான் நாடு நலம் பெறும். நம் மாகாணத்திற்கு ஏழாயிரம் பள்ளிகள் தேவைப் படுகின்றன. இப்பொழுது மூவாயிரத்து ஐந்நூறு பள்ளிகளே உள்ளன. உழவர் வரிப்பணம் வேறு எதற்கோ பயன் படுகின்றது. "இன்றுள்ள கல்லூரிகள் எங்கள் வரிப் பணத்தாலன்றோ உண்டாயின? எங்களுக்கு என்ன செய்தீர்கள்?" என்று அவர்கள் கேட்கும் நிலை வர்ப்போகின்றது. படித்துப் பட்டம் பெற்றவர், தமக்கே யாவையும் பயன்படுத்திக் கொள்கின்றனர். இக் குற்றங்கள் மாறக் குருகுல வழி நல்லது.

இது பரவ வேண்டுமென்று திரு. இளவழகனார் நினைத்துள்ளார். அவர் நினைவை உணர்ந்து நன்றாகப் பணி செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் நம் மக்களுக்குப் புலன்களை வளர்க்கக் கூடிய கல்வியையே கொடுக்கா விட்டு அவர்களை வைவதால் என்ன பயன்? அது நம் பிழையே.

சங்ககாலச் சான்றோர் உலகத் தொண்டு செய்தனர். அன்று கோப்பெருஞ் சோழர் வடக்கிலிருந்தபோது (சத்தியாக்கிரகப்) அவரைக் காணப் பிசிராந்தையார் என்னும் புலவர் சென்றார். அங்கு ஒரு கேள்விக்கு விடையளித்த பாட்டில் மனைவி, மக்கள், ஏவலர், அரசர் முதலாயினோர் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைக் கூறினார். அப் பாட்டு:

"யாண்டுபல வாக நரையில
வாகுதல்
யாங்கா கியரென வினவுதி
ராயின்
மாண்டஎன் மனைவியொடு
மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென்
இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான்
காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய
கொள்கை
சான்றோர் பலர் யான்
வாழு மூரே"

என்பதாகும்.

திரு. இளவழகனார், 'முல்லைக் கொடி' என்னும் இதழை நடத்துகின்றார். இன்று பெரும்பாலான இதழ்கள் நடுநிலைமையின்றி இருக்கின்றன. முல்லைக் கொடியைப் போன்ற சிலவே நடுநிலைமையுடன் வெளிவருகின்றன. அதோடு அது சமய உண்மைகளையும் வாழ்க்கை உண்மைகளையும் காலத்திற்கேற்றபடி விளக்கி வருகின்றது.

ஈ எறும்புகளும் கட்டுப்பாடு உடையவைகளாய் உள்ளன. நமக்கு அது இல்லை. அதனைப்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)